Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 28 2025

புதன்கிழமை 28, மே 2025 | ஒளி: 10 கதிர் 248 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## வடக்கில் காணி அபகரிப்பு

# வர்த்தமானி வாபஸ்

வடக்கு மாகாணத்தில் காணி விவகாரம் தொடர்பாக 2025 மார்ச் 28, அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியை அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள பல கிராமங்களில் நிலங்களை கையகப்படுத்துவது தொடர்பாக விவசாயம், கால்நடை, நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சகத்தின் கீழ் உள்ள நில உரிமை தீர்வுத் துறையால் வர்த்தமானி அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது.

வடக்கில் 5,940 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கு அந்த வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வர்த்தமானி தொடர்பில், பாராளுமன்றத்தில், வெள்ளிக்கிழமை (23) அன்று முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது, வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலே இந்த பேச்சுவார்த்தை இடம்பெற்றிருந்தது.

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் (28.03.2025) திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக திரும்பப் பெறுமாறு அரசை வலியுறுத்தின.

## இந்தியாவில் கொரோனா தாண்டவம்



இந்தியாவில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1009ஐ கடந்துள்ளதாக இந்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் மீண்டும் ஒரு புதிய கொரோனா வைரஸ் பரவி வருவதாக கூறப்படும் சூழ்நிலையில் இந்தியாவில் அச்சுறுத்த ஆரம்பித்துள்ளது.

தொடர்ச்சி P2

## உதவி கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கு விளக்கமறியல்



பாதாள உலகக் குற்றவாளியான மன்தினு பத்மசிறி எனப்படும் 'கெஹெல்பத்தர பத்மே'வுக்கு மூன்று போலி கடவுச்சீட்டுகளை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## "தேங்காய் விலை மேலும் உயரும்"

உள்ளூர் சந்தையில் தேங்காய் விலை தொடர்ந்து உயர்ந்திருப்பதற்கு முக்கிய காரணம், அரசாங்க தேங்காய் ஏலங்களில் இடைத்தரகர்களின் விலை நிர்ணய நடைமுறைகள் என தென்னை வேளாண்மை சபை தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாதத்திலிருந்து அறுவடை குறைந்த போதிலும், விலைகள் ரூ.200க்கு மேல் உள்ளன.



தொடர்ச்சி P2

## 40 அரசியல்வாதிகளை கைது செய்ய முஸ்தீபு



இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்த சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்படவுள்ள 40 அரசியல்வாதிகளின் பட்டியலை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டு ள்ளதாகத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மேர்வினுக்கு எதிராக குற்றப்பத்திரிகை



சுமார் 15 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்து மற்றும் பணத்தைச் சேர்த்ததாகக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக, வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் லஞ்சம் மற்றும் ஊழல் குறித்த சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால், வழக்குத் தாக்கல் செய்ய

தொடர்ச்சி P2

## "வாபஸ் வர்த்தமானி உடனே வரவேண்டும்"



வடமாகாண காணி தொடர்பான வர்த்தமானியை மீளப்பெற்றமைக்காக ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவிற்கும் அமைச்சரவைக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் பிரசுரித்த வர்த்தமானியை மீள்கைவாங்குவதாக செய்தி வெளியாகியுள்ளது. நாம் விதித்த காலக்கெடுவுக்கு முன் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது உடனடியாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

சமூக ஊடக பதிவில் இதனைத் தெரிவித்துள்ள அவர்,

தொடர்ச்சி P2



## பிறநாடுகளின் தீர்ப்புகளை அங்கீகரிக்க அங்கீகாரம்

பிற நாடுகளின் வழக்குத் தீர்ப்புகளை இலங்கையில் அங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்காக 2024ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க வெளிநாட்டுத் தீர்ப்புக்களை பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

### திருகோணமலை மாவட்டத்தில்

## மு.காவும் தமிழரசும் 5 சபைகளில் இணைந்தது


■ எஸ்.கீதபொன்கலன்



திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க இலங்கை தமிழரசுகட கட்சிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை (27) அன்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தொடர்ச்சி P2

## இரவுப் பொழுது உல்லாசத்தை அதிகரிக்க அனுமதி




இரவுப் பொழுதில் உல்லாச செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தை அதிகரித்தல், சுற்றுலாத் துறையை மேம்படுத்தல் மற்றும் கொழும்பு நகரில் அனுபவிக்கக்கூடிய உல்லாச அனுபவங்களை அதிகரிப்பதற்கும் கட்டமைப்பு ரீதியான அணுகலுக்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## எம்.பிக்களின் பாதுகாப்பு கோரிக்கையை பரிசீலனைக்கு அனுப்ப நடவடிக்கை

தமக்குப் பாதுகாப்புத் தேவை எனக் கோரும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளைத் தேசியப் பாதுகாப்புச் சபையின் பரிசீலனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாகப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார். பாதுகாப்பு தொடர்பான இறுதி மதிப்பீடு அறிக்கை தற்பொழுது கிடைத்துள்ள உறுப்பினர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பதில் பொலிஸமா அதிபர் மேலும் தெரிவித்தார்.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்ரமரத்ன தலைமையில் பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் பங்குபற்றலில் 2025.05.23 ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பதில் பொலிஸ மா அதிபர் இதனை குறிப்பிட்டார்.



பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் எதிர்த்தரப்பு கட்சித் தலைவர்கள் சிலர் 2025.05.20 ஆம் திகதி சபாநாயகரைச் சந்தித்து தமது பாதுகாப்புத் தொடர்பான சிக்கல்களை முன்வைப்பதற்குக் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைய, அன்றைய தினமே பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபாலவுடன் சபாநாயகர் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதற்கமைய, இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளின் முன்னேற்றத்தை தனக்கு அறிவிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தினார்.

நாட்டில் காணப்படும் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் அறிவுறுத்திய பொலிஸ்மா அதிபர்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 40 அரசியல் வாதிகளை கைது செய்ய முஸ்தீபு



தொலைக்காட்சி நேர்காணலின் போது, பேசிய முன்னாள் அமைச்சர் வீரவன்ச, இந்தப் பட்டியலில் ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்ரமசிங்கே அரசாங்கங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் பெயர்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பட்டியல் தொடர்பான நடவடிக்கை குறித்த வழிமுறைகளைப் பெறுவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்த சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஒருவர் ஜனாதிபதி செயலகத்திற்குத் தொடர்ந்து வருகை தருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன், "நானும் அந்தப் பட்டியலில் இருக்கிறேன். காஞ்சன விஜேசேகர மற்றும் ரமேஷ் பத்திரனேவும் இருக்கின்றனர். மஹிந்தானந்த அளுத்கமகேவும் இதுபோல் கைது செய்யப்பட்டார். அமைச்சகங்களின் கீழ் உள்ள துறைகளால் நடத்தப்பட்ட விஷயங்களுக்காக இந்தக் கைதுகள் செய்யப்படுகின்றன. ஆனால், இந்த சம்பவங்கள் தொடர்பாக அமைச்சகங்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்" என்று வீரவன்ச கூறினார்.

மே மாதம் நடந்த உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டதாகக் கூறிய அவர், ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக அவர்களைக் கைது செய்யாததால் தேர்தலில் வாக்குகளை இழந்ததாக அரசாங்கம் கருதுகிறது என்றார்.

முன்னாள்

அமைச்சர் வீரவன்ச, வீட்டுவசதி மற்றும் கட்டுமான அமைச்சராக இருந்த காலம் தொடர்பான ஒரு விவகாரம் தொடர்பாக லஞ்சம் மற்றும் ஊழல் குறித்த சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் முன் ஆஜராக அழைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

# மேர்வினுக்கு எதிராக குற்றப்பத்திரிகை



அதிக்குற்றச்சாட்டு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

தொழிலாளர் மற்றும் மக்கள் தொடர்பு அமைச்சராக இருந்தபோது 15 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்து மற்றும் பணத்தை எவ்வாறு சேர்த்தார் என்பதற்கான ஆதாரங்களை வெளியிடாமல் விட்டுவிட்டார்.

இந்த வழக்கு லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 23 (1) B இன் கீழ், 03 குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது, அதாவது, சட்டவிரோத சொத்துக்களைப் பெறுவதன் மூலம் குற்றங்களைச் செய்தல்.

கொழும்பு-7 பகுதியில் ஏழு மில்லியன் மதிப்புள்ள காணியை வாங்கியது, கடவத்த தலுபிட்டிய பகுதியில் ஒன்றரை மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள காணியை வாங்கியது, நான்கு சொகுசு ஜீப்களை வாங்கியது, கொள்ளுப்பிட்டி பித்தல சந்தியில் ஒரு காணியை வாங்கியது மற்றும் அவரது மகன் நாலக்கவுக்கு பல மில்லியன் மதிப்புள்ள சொகுசு ஜீப்பை வாங்கியது ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

# இந்தியாவில் கொரோனா தாண்டவம்



அதற்கமைய, இந்தியாவில் இதுவரை 1,009 செயலில் உள்ள கொரோனா நோயாளிகள் பதிவாகியுள்ளதாக இந்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுடெல்லியில் இருந்து 109 நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், அவர்களில் 99 பேர் கடந்த வாரத்தில் பதிவாகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அாத்துடன், கேரளா, மகாராஷ்டிரா, டெல்லி உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து பதிவான கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக இந்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கேரளாவில் 430 பேரும், மகாராஷ்டிராவில் 209 பேரும், புதுடெல்லியில் 99 பேரும், தமிழ்நாட்டில் 69 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்தியாவில் தற்போதைக்கு முகக்கவசம் கட்டாயம் இல்லை கொரோனா பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கைகளை மத்திய அரசு செய்துள்ளது.

இந்நிலையில், சிங்கபூரில் ஏப்ரல் 27 முதல் மே 3, 2025 வரையிலான வாரத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 14,200 ஆக உயர்ந்துள்ளது.. தாய்லாந்தில், மே 11 முதல் மே 17 வரை 33,030 பேர் பாதிக்கப்பட்டு இருந்தனர். பாங்காக்கில் 6,000 கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "வாபஸ் வர்த்தமானி உடனே வரவேண்டும்"



ஜனாதிபதிக்கு இன்று இலங்கை தமிழரசுக் கட்சி எழுதிய கடிதமொன்றையும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அந்த கடிதத்தில்,

மேற்படி வர்த்தமானி அறிவிப்பில் அடையாளம் காணப்பட்ட பெரும்பாலான நிலங்கள் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவில் மூன்று சட்ட ஆலோசனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

முன்னர் அனுப்பிய கடிதங்களில் குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக சுனாமிக்கு பின்னர் அரசாங்க பொறிமுறைகள் மூலம் பணம் கொடுக்கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் ஊடாக பலருக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றிற்கான உறுதிகள் எவையும் பலருக்கு வழங்கப்படவில்லை.

அவர்கள் இந்த காணிகளில் வீடுகளில் 10 வருடங்களிற்கு மேல் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த தருணத்தில் இந்த சட்டத்தை பிரயோகிப்பது இன்னமும் குழப்பகரமான நிலையை உருவாக்கும்.

இந்த பகுதிகளில் காணி நிர்ணய கட்டளை சட்டத்தின் விதிகளை குறிப்பாக இந்த காலகட்டத்தில் பயன்படுத்துவது மிகவும் பொருதமற்றது என்பதை நாங்கள் மீள வலியுறுத்துகின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தேங்காய் விலை மேலும் உயரும்"



உற்பத்தியை அதிகரிக்கும் மற்றும் பயன்படுத்தப்படாத அரசு தோட்டங்களைப் பயன்படுத்தும் அதே வேளையில், சதோச மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் சலுகை விலையில் தேங்காய்களை விற்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

விலைகளை உறுதிப்படுத்த அவசர நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் தேங்காய் அறுவடை மீண்டும் குறையக்கூடும் என்றும், இது மற்றொரு விலை அதிகரிப்புக்கு வழிவகுக்கும் என்றும் ஜெயக்கொடி எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிறநாடுகளின் தீர்ப்புகளை அங்கீகரிக்க அங்கீகாரம்

அதற்கமைய, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரால் குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையத் தயாரிக்கப்பட்டு, 2025-03-28 திகதிய 2429/51 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் மூலம் அவ்வாறான வழக்குத் தீர்ப்புகளை அங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தலுக்கு உட்படுத்த வேண்டிய வெளிநாடுகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்குறித்த ஒழுங்கு விதிகளை அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# உதவிக் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கு விளக்கமறியல்



உதவி கட்டுப்பாட்டாளர் அனுர சம்பத் பண்டாரவை மே 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவெல திங்கட்கிழமை (27) அன்று உத்தரவிட்டுள்ளார்.

2025ஆம் ஆண்டு பெப்ரவரியில் கொழும்பில் உள்ள நீதிமன்றத்தில் போதைப்பொருள் கடத்தல்காரர் கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 'கெஹல்பத்தர பத்மே'வுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்கியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

துபாயில் இருக்கும் 'கெஹல்பத்தர பத்மே' என்பவருக்காகப் போலி கடவுச்சீட்டைத் தயாரித்த குற்றச்சாட்டில் முன்னர் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் உதவி கட்டுப்பாட்டாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# மு.காவும் தமிழரசும் 5 சபைகளில் இணைந்தது



இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் திருகோணமலை மாவட்டக்கிளைத் தலைவருமான சன்முகம் குகதாசன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோருக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.


அந்த வகையில், திருகோணமலை மாநகர சபையில் ஆட்சி அமைக்க இலங்கை தமிழரசுக் கட்சிக்கு முஸ்லிம் காங்கிரஸ் பூரண ஆதரவு வழங்கும்.

மூதூர் பிரதேச சபையில் முதல் 2 வருடங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியும், இறுதி 2 வருடங்கள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரும் தவிசாளராக செயற்படுவர்.

குச்சவெளி பிரதேச சபையில் முதல் 2 வருடங்கள் முஸ்லிம் காங்கிரஸூம் இறுதி 2 வருடங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியும் தவிசாளர் பதவியை வகிக்கும். பட்டினமும் சூழலும் மற்றும் தம்பலகாமம் பிரதேச சபைகளில் இரு கட்சிகளும் இணைந்து செயல்பட்டு ஆட்சியமைப்பது என்றும் இரு கட்சிகளுக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

மேலும், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் இணைந்து செயற்படக் கட்சிகள் இரண்டும் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளன என்று எம்.எஸ்.தௌபீக், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

# எம்.பிக்களின் பாதுகாப்பு கோரிக்கையை பரிசீலனைக்கு அனுப்ப நடவடிக்கை



அண்மைக்காலமாக இடம்பெற்ற பல மனிதப்படுகொலைகள் குற்றக் கும்பல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கிடையில் இடம்பெறும் மோதல்களின் விளைவுகள் எனவும், அந்தக் குற்றச் செயல்களுக்குப் பிரதேச அரசியல்வாதிகளின் தொடர்புள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.


இங்கு எதிர்த்தரப்பு கட்சித் தலைவர்களினால் தமது தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பைப் பெறுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள தேவை தொடர்பில் விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனா கருத்துத் தெரிவிக்கையில், தனக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு வசதிகள் இல்லையெனில், தனக்கான பாதுகாப்பை செய்து கொள்வதற்குத் துப்பாக்கி வழங்குமாறு முன்மொழிந்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, உயர்ந்த ஜனநாயகப் பண்புகளைக் கொண்ட நாடொன்றில் பாதுகாப்புக்காகத் துப்பாக்கிகள் வழங்கப்படக்கூடாது எனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் ஒவ்வொரு நபர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குறிப்பிடுகையில், புதிய உறுப்பினர்கள் போதைப்பொருளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதால் அவர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதால் அந்த உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது பொருத்தமானது என குறிப்பிட்டார்.

மேலும், கௌரவ எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ஆகியோர் குறிப்பிடுகையில், தமது கட்சிகளில் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகள் இருந்தால் அவர்களது தகவல்களை முன்வைக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும் வரை, முழுமையான பாதுகாப்பை அகற்றாமல், பாதுகாப்பு தேவை எனக் கூறும் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவது பொருத்தமாகும் எனவும் மதிப்பீடு அறிக்கை கிடைத்தவுடன் அதன் பரிந்துரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் திலித் ஜயவீர ஆகியோர் தெரிவித்தனர்.

# இரவுப் பொழுது உல்லாசத்தை அதிகரிக்க அனுமதி



அதற்கமைய,'கடலோர இராப் பொழுது: உறங்காத கொழும்பு' *(Marine Nights: Awakening Colombo)* தொனிப்பொருளின் கீழ் கொள்ளுப்பிட்டி புகையிரத நிலையத்திலிருந்து தெஹிவளை வரைக்குமான 7.4 கிலோ மீற்றர் தூரம் கொண்ட கொழும்பு கடலோர வீதியை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதில் காலிமுகத்திடல் தொடக்கம் புனித தோமஸ் ஆரம்ப பாடசாலை வரைக்கும் 400 மீற்றர் தூரமான வலயத்தில் அதிக கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, உத்தேச கருத்திட்டதை நடைமுறைப்படுத்துவதற்காக வெளி விவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# “நோர்வூட் பிரதேச செயலகம் இடமாற்றப்படாது”

## ஜீவன் எம்.பியிடம் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

நோர்வூட் பிரதேச செயலகம் ஹட்டன் நகரத்துக்கு இடமாற்றம் செய்யப்படாமல் தற்போது இருக்கும் கட்டிடத்திலேயே தொடர்ந்து இயங்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானிடம், நோர்வூட் பிரதேச செயலக செயலாளர் ஜி.எஸ்.டி.கம்லத் தெரிவித்துள்ளார்.

நோர்வூட் பிரதேச செயலக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஹட்டன் - டிக்கோயா நகர சபை மண்டபத்தில்(டிக்கோயா) செவ்வாய்க்கிழமை (27) அன்று இடம்பெற்றது. இதன்போது ஜீவன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே கம்லத் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேலும் கருத்துரைத்த ஜீவன் தொண்டமான். சிறுநீரக நோய் தாக்கத்திற்கான வைத்திய சேவைகளை வழங்குவதற்காக வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறைகள் நிலவுவதால் அது விரைவில் நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

பாடசாலைகளில் மலசலக்கூட வசதிகள் இல்லை. இதை நாங்கள் உலக வங்கியின் ஆவணங்கள் மூலம் கண்டறிந்திருந்தோம். மற்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான இந்த போதைப்பொருள் பிரச்சனை 2021இல் மலையகத்தில் ஒரு பாரிய போதைப் பொருள் பிரச்சினையாக நடந்து கொண்டிருக்கும் போது நாங்கள் பொலிஸார் இன் ஊடாக ஒரு நடவடிக்கை எடுத்திருந்தோம்.

அதாவது, ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு கண்காணிப்புக் குழு ஒன்று வைப்போம். அதில் கட்டாயமாக ஒரு பெண், ஒரு ஆண் பொலிஸ் அதிகாரியும் இருப்பர். அந்த செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பித்தால் இந்த பிரச்சினையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.

இரண்டாவது விடயம் பொலிஸார் நினைத்தால் விழிப்புணர்வு நிகழ்வுகள் செய்ய முடியும்.

மாதத்திற்கு இரண்டு பாடசாலைகளை சரி முறையே செய்தால் கூட ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

அதேபோல, உண்மையான விடயம் என்னவென்றால் 50 வீடுகளுக்கு இரண்டு பொலிஸாரை வைப்பதில் எனக்கு சம்மதம் இல்லை. காரணம் மக்கள் சுதந்திரமாக வாழ்பவர்கள், போதைப் பொருள் பிரச்சினையைத் தடுப்பதற்கு பல்வேறு மாற்று வழிகள் உள்ளன என சுட்டிக்காட்டினார்.





# காளாஞ்சி வழங்கி வைப்பு

■ புகஜிந்தன்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நல்லூர் கந்தன் பெருவிழாவிற்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்தல், வீதி தடைகளை அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழி செய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி பெருவிழா பட்டோலை அடங்கிய காளாஞ்சி, ஆலய கணக்குபிள்ளையால் செவ்வாய்க்கிழமை (27) அன்று கையளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகர சபை வளாகத்தில் தோரணங்கள் கட்டி அலங்காரங்கள் அமையப்பெற்றிருந்தது.











wijeyanewspapers helping shape opinions | IEPSL Institute of Environmental Professionals Sri Lanka | TIMES HIGHER EDUCATION Towards a Bright Future A WIJEYA NEWSPAPERS LTD GROUP COMPANY

நாடுதழுவிய ரீதியிலான கட்டுரை மற்றும் சுவரொட்டி போட்டி

# உலக சுற்றுச்சூழல் தினம் 2025

தொனிப்பொருள் – “பிளாஸ்டிக் மாசுபாட்டை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்”

ஜூன் 5 ஆம் திகதி வரும் உலக சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடும் வகையில், விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், இலங்கை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் நிறுவனம் (IEPSL) மற்றும் TIMES UNIVERSITY ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்படும் நாடுதழுவிய ரீதியில், கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டியில் பங்கேற்க பின்வரும் வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களை அழைக்கிறது.

## போட்டி வகைகள்

| வகை | வயது | வகை |
|---|---|---|
| A | வயது 6–10 | சுவரொட்டி |
| B | வயது 11–15 | சுவரொட்டி |
| C | வயது 11–15 | கட்டுரை |
| D | வயது 16–19 | கட்டுரை |

## சுவரொட்டி அளவுகோல்கள்

- அளவு A3, கையால் வரையப்பட்ட வரைபடங்கள் மட்டும் (டிஜிட்டல் வரைபடங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது)
- ஊடகம் - வெளிர் வண்ணம், நீர் வண்ணம், எண்ணெய் வண்ணம்
- சுவரொட்டியின் அசல் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.

## கட்டுரை அளவுகோல்கள்

### சொற்கள் வரம்பு

C வகை : 250–300 சொற்கள்
D வகை : 400–600 சொற்கள்

### கட்டுரை எழுதும் முறை

- கையால் எழுதப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- மொழி சிங்களம், ஆங்கிலம் அல்லது தமிழ் மொழிகளில்

## சமர்ப்பிப்பு விவரங்கள்

உங்கள் படைப்புகளை அஞ்சல் மூலமாகவோ அல்லது கீழே உள்ள முகவரிக்கு நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.

**விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட், இல. 36, 4வது மாடி, ஹைட் பார்க் கோணர், கொழும்பு –02**

கட்டுரைகள்: உங்கள் கட்டுரைகளின் மென் பிரதிகளை மட்டும்
மின்னஞ்சல் : brands@wijeya.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
மின்னஞ்சல் அனுப்பும்போது: WED 2025_Essay Competition 60 என பொருள் வரியில் குறிப்பிடவும்.
தொடர்புகளுக்கு: 0743946392

**உங்கள் படைப்புகளை சமர்ப்பிக்கும் போது பின்வரும் விவரங்களைச் சேர்க்கவும்:**

- முழு பெயர்:
- வயது
- பாடசாலை:
- பெற்றோர்/ பாதுகாவலரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் .

**வெற்றியாளர்களுக்கு மதிப்புமிக்க பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

## இறுதி திகதி:

2025 ஜூன் 10

**சுற்றுச்சூழலுக்காக குரல் எழுப்பும் இந்த வாய்ப்பை தவற விடாதீர்கள்.**
விஜயா நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட், இலங்கை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் சங்கம் (IEPSL) மற்றும் TIMES UNIVERSITY ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

EXCLUSIVE GIFT PARTNER
SUPERIOR Designed for Brilliance | STAR A Komar company | Talawakelle Tea Estates®

# பிணி போக்கிட விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்

எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் உலகிலிருந்து வறுமை மற்றும் பசி ஒழிக்கப்படும் என்று நம்பப்படுகிறது. இருப்பினும், 2024ஆம் ஆண்டில், 53 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் 295 மில்லியன் மக்கள் கடுமையான அளவிலான பசியை அனுபவித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 13.7 மில்லியன் அதிகரிப்பைக் குறிக்கிறது, ஐக்கிய நாடுகள் சபை உலகளாவிய பசியில் புதிய உச்சத்தை அறிவித்துள்ளது.

மோதல், காலநிலை மாற்றம் மற்றும் பொருளாதார உறுதியற்ற தன்மை உள்ளிட்ட பல காரணிகள் பசியின்மை அதிகரிப்பிற்குப் பங்களிக்கின்றன. குறிப்பாக, மோதல் ஒரு முக்கிய காரணியாக அடையாளம் காணப்பட்டது, இது 20 நாடுகளில் கிட்டத்தட்ட 140 மில்லியன் மக்களைப் பாதித்தது, இதில் பேரழிவு தரும் அளவிலான உணவுப் பாதுகாப்பின்மை எதிர்கொள்ளும் பகுதிகள் அடங்கும்.

2024 உலகளாவிய பசி குறியீட்டுப் பட்டியலின் பிரகாரம், 20 நாடுகள் 5 புள்ளிக்குக் குறைவாகப்பெற்று முதலாம் இடத்தை பெற்றுள்ளன. 100 புள்ளியைப்பெற்று சோமாலியா 127 ஆவது இடத்திலும் இலங்கை 56ஆவது இடத்திலும் உள்ளன. நமது நாட்டின் வருமானம் மற்றும் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டால், இந்த இடம் திருப்திகரமாக இருக்கும் அளவுக்கு இல்லை என்று தோன்றுகிறது.

ஊட்டச்சத்துக் குறைபாடு, குழந்தை எடை வளர்ச்சி, குழந்தை வளர்ச்சி குறைவு மற்றும் குழந்தை இறப்பு விகிதம் ஆகியவற்றை வைத்துத் தான் இந்த உலகளாவிய பசி குறியீடு கணக்கிடப்படுகிறது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

நம் நாட்டில் வறுமையையும் பசியையும் தாங்கிக் கொள்ள முடியாமல் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்பவர்கள் அல்லது அதற்கு முயற்சிப்பவர்கள் வறுமை மற்றும் வேலையின்மையால் அவதிப்படுபவர்கள் என பல்வேறு தரப்பினர் தொடர்பிலான தகவல்களும் வெளியாகியுள்ளன. சாப்பிட எதுவும் இல்லாததால் எதையாவது சாப்பிடுவோரும் உள்ளனர்.

இலங்கையில் பொருளாதார மதிப்புள்ள ஒவ்வொரு தயாரிப்பு மற்றும் சேவையின் விலைகளும் அதிகரித்துள்ளன. விலை அதிகரிக்காத ஒரு பொருளைக் கண்டுபிடிப்பது, கடினமாகி விட்டதாகப் பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்.

அரிசி, சர்க்கரை, பருப்பு, பால் மா, தேங்காய், எரிவாயு, காய்கறிகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களாகக் கருதப்படும் அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் வேகமாக அதிகரித்துள்ளன. இதைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள், இந்த நாட்டில், சகித்துக்கொள்ளக்கூடியவர்களை விட அதிகமாக மதிக்கப்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை வாங்க முடியாத மக்கள், ஒரு நேரத்தில் ஒரு வேளை மட்டுமே சாப்பிட்டு வாழ்க்கையை நடத்த முயற்சிக்கின்றனர். இதுபோன்ற சூழ்நிலையைத் தாங்க முடியாதவர்களைப் பற்றிப் பேசுவதற்கு யாரும் இல்லை.

உலக பட்டினி தினமான இன்றைய தினம் பசி எனும் பிணி போக்கிட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். அத்துடன், தேவைக்கு மட்டுமே உணவைச் சமைத்து முழுமையாகச் சாப்பிட்டு விட்டு, உணவுகள் வீணாக்கப்படுவதைத் தவிர்க்க, விழிப்புணர்வைக் குழந்தைப் பருவங்களில் இருந்து ஏற்படுத்தவேண்டும். இல்லையேல், 2030ஆம் ஆண்டுக்குள் உலகிலிருந்து வறுமை மற்றும் பசி ஒழிக்கப்படும் என்பதும் கேள்விக்குறியாகிவிடும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்



www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா? மெல்ல மெல்ல பட்டை தீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழு மனிதனாகி விட முடியாது. ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள், பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக! மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது. அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்! திணறுகின்றது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### “பாலத்தை புனரமைத்து தரவும்”



வவுணதீவு பிரதேசத்திலுள்ள மகிழவெட்டுவான் பாலம் கடந்த 2023 டிசெம்பர் மாதம் உடைக்கப்பட்டதால் 2 வருடமாக மட்டக்களப்பு - மகிழவெட்டுவான் இடையிலான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்திற்குச் செல்லும் பேருந்து, பாலம் வரை சென்று நிறுத்தப்பட்டதும், பயணிகள் மூட்டை முடிச்சுகளுடன் பாலத்தைக் கடந்து சென்று அங்கிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த உடைந்த பாலத்திற்கு அருகில் சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் தற்காலிக பாலமொன்றை அமைத்துள்ளனர். அதுவும் வெள்ளத்தினால் உடைந்துள்ளது.

இது தொடர்பாக அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்ற போதும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தேர்தல் காலங்களில் வாக்கு கேட்டு வந்த அரசியல்வாதிகள் கூட இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறு, பாலத்தைப் புனரமைக்காது எந்த அரசியல்வாதிகள் வந்தாலும் அவர்களைப் பிடித்து பாலத்தில் கட்டிப்போடுவோம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– கனகராசா சரவணன்

## வடக்கிலும் தெற்கிலும்
# நினைவு கூரல்களில் சிக்கிக்கொண்ட அரசாங்கம்



எம்.எஸ்.எம். ஐயூப்

அரசாங்கம் போரில் உயிரிழந்த படை வீரர்களை நினைவு கூர்ந்தும் தமிழர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களை நடத்தியும் ஒரு வாரத்துக்கு மேலாகிய போதிலும் அவற்றோடு எழுந்த சில சர்ச்சைகளில் அரசாங்கம் இன்னமும் சிக்கியிருக்கிறது.

இன்னமும் சிங்கள தேசியவாத சக்திகள் சமூக வலைத்தளங்கள் மூலமாக அரசாங்கத்தை மிக மோசமாகத் தாக்கி வருகின்றன. அரசாங்கம் அவ்விமர்சனங்களை அவ்வளவாகப் பொருட்படுத்துவதாகக் காட்டிக்கொள்ளா விட்டாலும், உண்மையிலேயே அரச தலைவர்கள் அவற்றுக்குப் பதிலளிக்கத் தயங்குவதாகவே தெரிகிறது.

போரில் உயிரிழந்த போர் வீரர்களை நினைவு கூர்வதற்காக இவ்வருடம் மே 19ஆம் திகதி அரசாங்கம் நடத்திய நிகழ்ச்சி பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தலைமையில் நடைபெறும் என்று அரசாங்கம் முதலில் அறிவித்ததையடுத்தே முதலாவது சர்ச்சை உருவாகியது. இந்த அறிவித்தலின்படி, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதில் கலந்து கொள்வதில்லை என்றே தெரிந்தது.

இதனை எதிர்க்கட்சிகளும் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களும் கடுமையாக விமர்சித்தன. அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி முப்படைகளின் பிரதம கட்டளை அதிகாரியாவார். போரில் உயிர் நீத்த போர் வீரர்களை நினைவு கூரும் நிகழ்ச்சியில் முப்படைகளின் பிரதம கட்டளை அதிகாரி கலந்த கொள்ளாவிட்டால் அதற்கான காரணத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று பலர் வாதிட்டனர்.

அதேவேளை, இலங்கையின் இராணுவ தர வரிசை பிரகாரம் இராணுவ நிகழ்ச்சியொன்றில் பீல்ட் மார்ஷல் ஒருவருக்கு மேல் முப்படைகளின் பிரதம கட்டளை அதிகாரியான ஜனாதிபதி மட்டுமே இருக்க முடியும் என்றும் எனவே, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அவ்வாறான நிகழ்ச்சியொன்றுக்குத் தலைமை தாங்க முடியாது என்றும் சிலர் சுட்டிக் காட்டினர்.

ஜனாதிபதி இந்நிகழ்வில் கலந்துகொள்ளாமைக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் நெருக்குதல் காரணமென்றும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த தமிழர்கள் காரணமென்றும் பலர் அவரவர் விரும்பியவாறு வரைவிலக்கணம் செய்தனர். ஜனாதிபதி தமிழர்களுக்கு அடிபணிந்து செயற்படுகிறார் என்பதே அவர்களது வாதமாகியது.

இவற்றுக்குப் பதிலளிக்காமலிருந்த அரசங்கம் நிகழ்ச்சியில் ஜனாதிபதி கலந்து கொள்வார் என்று கடந்த 18ஆம் திகதி அறிவித்தது. ஜனாதிபதியும் அதில் கலந்துகொண்டார். நிகழ்ச்சிக்குப் பின்னர் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்ட வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் இந்த குழப்பமான நிலைமையைப் பற்றிக் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், “ஜனாதிபதி, நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவே இருந்தார் என்றும் பாதுகாப்பு பிரதி அமைச்சரின் தலைமையில் நிகழ்ச்சி நடைபெறும் என்று வெளியான அறிவித்தல் தகவல் பரிமாற்றத்தின் போது, ஏற்பட்ட குளறுபடியொன்று” என்றும் கூறினார். ஆனால், அதனை எவரும் ஏற்றுக்கொண்டு இருப்பார் என்று கூற முடியாது.

அது தகவல் பறிமாற்றலின் போது, ஏற்பட்ட குளறுபடியாக இருந்தால், தகவல் திணைக்களமோ அல்லது ஜனாதிபதி செயலகமோ உடனடியாக அதனைத் திருத்தியிருக்கலாம். ஆனால், அரசாங்கம் இறுதி வரை அவ்வாறு செய்யவில்லை. அதாவது இறுதி நேரம் வரை அரசாங்கத்தில் எவரும் ஜனாதிபதியின் வருகையை எதிர்பார்க்கவில்லை என்பதாகும்.

இது அரசாங்கம் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் அநாவசியமாகத் தேடிக் கொண்ட பிரச்சினையொன்றாகும். படையினரைப் புகழும் இது போன்ற நிகழ்ச்சிகள் நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கலாம் என்றும் எனவே, அதில் ஜனாதிபதி கலந்துகொள்ளக்கூடாது என்றும் தேசிய மக்கள் சக்தி முதலில் கருதியிருக்கலாம். அது நியாயமான கருத்துமாகும்.

ஆயினும் இன்றைய நிலையில், இது போன்றதோர் நிகழ்ச்சியைத் தேசிய மக்கள் சக்தி பதவிக்கு வந்தவுடன் இரத்துச் செய்ய முடியாது. அதனை நடத்துவதாக இருந்தால் ஜனாதிபதி அதில் கலந்து கொண்டாலும், இல்லாவிட்டாலும் அதன் நன்மை தீமை எதையும் தேசிய மக்கள் சக்தியே ஏற்க வேண்டும். எனவே, அதனை நடத்துவதாக இருந்தால் ஜனாதிபதி அதில் கலந்து கொள்ளாது புதியதோர் சர்ச்சையை உருவாக்கி இனவாதிகளுக்கு தீனி போடுவதை விட அவர் அதில் கலந்து கொள்வதே சிறந்ததாகும்.

படை வீரர்களை நினைவு கூரும் நிகழ்வில் கலந்து கொண்டு ஜனாதிபதி நிகழ்த்திய உரையையும் பல சிங்கள தேசியவாதிகள் விமர்சிக்கின்றனர். அவர் படை வீரர்களைப் போர் வீரர்கள் (ரன விருவோ) என்று கூறாமல் படை வீரர்கள் (செபலு) என்று கூறினார் என்றும் பயங்கரவாதத்தை எதிர்த்து கருத்து தெரிவிக்கவில்லை என்றும் போர் வெற்றி என்ற சொல்லைக் குறிப்பிடவில்லை என்றும் அவர்கள் அவரை விமர்சிக்கின்றனர்.

இந்த பிரச்சினையைப் பற்றியும் மேற்படி, தொலைக்காட்சி நேர்காணலின்போது, அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அமைச்சர், “இது போன்ற விடயங்களைப் பற்றி கருத்துத் தெரிவிக்கும் போது, மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்” என்றார். படையினரைப் போர் வீரர்கள் என்று அழைப்பதில் என்ன பிரச்சினை இருக்கிறது என்று கேட்கப்பட்ட போது, “அதில் பிரச்சினை இல்லை என்றும் நாம் அச்சொல்லைப் பாவிக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டிலும் தாம் இருப்பதில்லை என்றும் ஆயினும், நாம் அச்சொல்லுக்குப் பதிலாகப் படைவீரர்கள் படை அதிகாரிகள் என்ற சொற்களையே விரும்புகிறோம்” என்றும் கூறினார்.

இது ஒரு வித நழுவலான பதில் என்பதில் சந்தேகமே இல்லை. ஆயினும், அரச தலைவர்கள் அவ்வாறு ஏன் நழுவுகிறார்கள் என்பதையே கவனிக்க வேண்டியுள்ளது. அவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை மதிப்பதாகத் தெரிகிறது. எனினும், அரசியல் காரணங்களுக்காகத் தமிழ் தலைவர்கள் அதனைப் பாராட்டத் தயாராக இல்லை. இது முழு மனதோடு செய்த காரியம் அல்ல என்றும் அவர்கள் கூறலாம்.

அதேவேளை, இது புலம்பெயர் தமிழர்களின் மனதை வெள்ள மேற்கொண்ட முயற்சி என்றும் தமக்கு வாக்களித்த வட பகுதி தமிழர்களைத் திருப்திப்படுத்த மேற்கொண்ட முயற்சி என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச உள்ளிட்ட சிங்கள தேசியவாத மற்றும் இன வாத தலைவர்கள் கூறுகின்றனர். அதாவது நல்லிணக்கத்தை நோக்கி சிறியதோர் அடி எடுத்து வைக்க முற்பட்டதால் தேசிய மக்கள் சக்தி இரு புறத்தாலும் அடி வாங்குகிறது.

இந்த நினைவு கூரல் விடயத்தில் அரசாங்கம் மிகவும் சிக்கலான பிரச்சினைகளை எதிர்நோக்கவும் நேர்ந்தது. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் போரில் கொள்ளப்பட்ட தமிழ் மகளை நினைவு கூருவதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு பொலிஸாரும் படையினரும் இடையூறுகளை விளைவித்தனர். ஆனால், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் போலவே தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலத்திலும் அவ்வாறான இடையூறுகள் இடம்பெறவில்லை.


ஆனால், கனடாவில் தமிழினப் படுகொலை நாள் அனுஷ்டானத்தை அரசாங்கம் எதிர்த்தது. அதேபோல, கடந்த 10ஆம் திகதி அந்நாட்டில் ஒண்டாரியோ பிராந்தியத்தில் பிரம்ப்டன் நகரில் தமிழ் படுகொலை நினைவுச் சின்னம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இதனையடுத்து, வெளிநாட்டு அமைச்சர் விஜித்த ஹேரத் இலங்கைக்கான கனேடியத் தூதுவரை வெளிநாட்டு அமைச்சுக்கு அழைத்து அது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்பை கனேடிய அரசாங்கத்துக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாகவும் மேற்படி நேர்காணலில் அமைச்சரிடம் கேட்கப்பட்டது. இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அதற்கு அவர் பதிலளித்தார். அத்துடன், இது போன்ற கருத்துக்களால் நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு இடையூறுகள் ஏற்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் தமிழினப் படுகொலை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் கருத்தை நிராகரிக்க அரச தரப்பில் இரண்டு பிரதான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. இலங்கையில் போர் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக 2014ஆம் ஆண்டு மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. ஆணையாளர் நவநீதம் பிள்ளையினால் விசாரணையொன்று நடத்தப்பட்டது. பின்லாந்து, நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த சர்வதேச ரீதியாக புகழ்பெற்ற மூவரால் இந்த விசாரணை நடத்தப்பட்டது. சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பான சட்டங்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே அவ்விசாரணை நடைபெற்றது.

2015ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அவ்விசாரணையின் அறிக்கையில், எங்கும் இலங்கையில் இனப் படுகொலை நடைபெற்றதாகக் குறிப்பிடப்படவில்லை. இதுவே அரசாங்கத்தின் ஒரு வாதமாகும். அதேபோல் இலங்கை விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்க அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூன் 2010ஆம் ஆண்டு ஒரு குழவை நியமித்தார். அக்குழுவும் விசாரணையொன்றை நடத்தி அறிக்கையொன்றை வெளியிட்டது. அதிலும், இலங்கையில் இனப் படுகொலை நடைபெற்றதாக குறிப்பிடப்படவில்லை. இது அரசாங்கத்தில் இரண்டாவது வாதமாகும்.

இவ்வாறு வடக்கிலும் தெற்கிலும் நினைவேந்தல்கள் விடயத்தில் நடுநிலையைக் காண அரசாங்கம் முயன்றாலும் இரு புறத்தாலும் அரசாங்கத்தின் நிலைப்பாடு நிராகரிக்கப்படுவதாகவே தெரிகிறது.




# தளுகை



எஸ்.நயன கணேசன்

நிலமிழந்து போனால்
பலமிழந்து போகும்...
பலமிழந்து போனால்
இனம் அழிந்து போகும்...
ஆதலால், மானுடனே..!
தாய்நிலத்தை
காதலிக்கக் கற்றுக்கொள்..!
எனப்பாடிய
தமிழீழப் பாவலர்
புதுவை இரத்தினதுரை
அவர்களுக்கு..!
மகாராசன்

மாதம் மே என்பது ஈழத்தமிழரின் வாழ்வில் வடுக்கள் நிறைந்த வரலாற்றைக் கொண்டிருக்கும் கருப்பு மாதம். எஞ்சிய சொந்தங்கள் தம் பேரன்பு கொண்ட உறவுகளின் நினைவுக் கிடங்குகளின் வழியாகக் கண்ணீருக்குச் சொல் வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கும் கரிநாட்கள். இந்த ஆறாத்துயரை போக்க இதுவரை நீதியும் துணியவில்லை எம்மை ஆண்டவனும் முன்வரவில்லை படைத்த கடவுளும் வேடிக்கை பார்க்கின்றான்.

இற்றைக்கு சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு முனைவர் ஏர் மகாராசன் 'நிலத்தில் முளைத்த கவிதைகள்' என்ற இப்புத்தகத்தினை தபாலில் எனக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இவரது கவிதைகளில் இரசனையும் அவதியும் மட்டுமல்லாமல், தமிழ் நிலத்தைப் பால்படுத்தும் சதிவலை பின்னலை அறுக்கத் துணியும் கத்தரிக்கோல் சொற்களும் பரவி இருக்கின்றன என்ற முனைவர் அரங்க மல்லிகாவின் மதிப்புரை பேராசான் மகாராசனின் தமிழனப் பற்று கொண்டுள்ள ஆன்மாவை அடையாளங் காண்கிறது.

உள்ளத்தை உருக்கும் கவிதை படைப்பும் தமிழ் மொழியின் ஆளுமையும் நிச்சயம் வாசகனை நிலைகுலையச் செய்யும் என்பது என் திண்ணம். படிப்பவர்கள் மவுனமாய் அழுவார்கள்.

தமிழில் ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் என்பதற்கு மகாராசனின் கவி வரிகளும் சான்று பகர்கின்றன. ஈழத்தமிழனின் சொல்லெணாத்துயரத்தையும் அவர்களது ஆன்மாவையும் ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளார் முனைவர்.

ஒரு படைப்பாளனின் படைப்பு அவனுக்குச் சொந்தமில்லை என்பதற்கு இந்த ஒரு கவிதையும் ஒரு சாண். 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த காலப் பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் சிதைக்கப்பட்டு அனாதையாய் பொங்கலுக்கும், பூஜைக்கும், திருவிழாவுக்கும் மற்றும் பக்தர்களுக்காகவும் காத்திருந்த மாவிட்டபுரத்தானை ஒரு கவிதை நினைவூட்டியது. இன்றும் அக்கொடிய எனது மவுன அழுகையை அப்படியே எழுத்தில் வடித்துள்ள பேராசனை ஆரத்தழுவுகின்றேன் இப்படைப்பினூடே...

திரிகள் நனைத்து
வளையொலி இசைத்த
உள்ளங்கைக் கோடுகளில்
கரியை அப்பியிருக்கின்றன
நெய் கசிந்த மாடக்குழிகள்...

முகமற்ற குறிகள்
புணர்ந்து கிடந்த கருவறைக்குள்
மெல்ல நுழைந்து பார்த்த
சிற்றொளிக் கோடுகள்,
கரைந்து போன
காலடித் தடங்களை
தாவியோடி அணைத்திட
சுவர்களில் முட்டி மோதி
அழுது மறைகின்றன...

வளர்பிறையும் தேய்பிறையும்
காலத்தில் கரைந்து போனதை
தோல் உரித்துக்காட்டியிருக்கிறது
கருநாகத்தின் சட்டையொன்று.

களவு போன கலசத்தைப் பேசியபடியும்,
நஞ்சையும் புஞ்சையும் பறிகொடுத்து
காணிகளில் உழுதவர்கள் கண்ணீர் மல்க
ஊர் விட்டுப் போன
திசை வெறித்துத் தவித்தும்,
தொன்மங்களின் பூச்சுகள் கரைய
உயிர் வழியும் கண்களால்
சுதைகள் ஒட்டி நிற்கின்றன
கோபுரத்தை சுற்றியபடி..!

திமில் பிடித்துத் தழுவுதல் வேண்டி
ஒற்றையாய் மண்டியிட்டு
வெளியே காத்திருக்கிறது எருது

கோயிலுக்குச் சாற்றிய காணிகளும்
களவு போயின இப்போதும்

கருவறைக்குள்
ஒளிந்திருக்கும் தெய்வம்
எப்போதும் போலவே
வெளிவருவதாய்த் திட்டம் இல்லை
இப்போதும்..!

எழுதப்படாமலே போனது
என்தூர்த் தலபுராணம்.

ஒரு நல்ல கவிதை, மேலும் சில வரிகளையும் நினைவுகளையும் மீட்டும் எனபது பொய்யில்லை என தனது அணிந்துரையில் கவிஞர் யுகபாரதி கூறியுள்ளமை நூலாசனின் கவித்துவத்திற்கு மேலும் வலு சேர்க்கின்றது.

அந்த வகையில் அந்த இறுதி போரில் அரங்கேறிய அந்த பிஞ்சு கொலை பற்றிய கவிதை என் இதயத்தை மீண்டும் மீண்டும் திகைக்க வைக்கின்றது. வார்த்தைகள் விசும்புகின்றன. பெரும் துயருடன் 34ஆம் பக்கத்தை கடந்துப் போனேன்.

நூற்றாண்டு கடந்தும் உயிர் வாழும் கவி வரிகள்....

தன்னைக் கொள்ளப்போவது தெரிந்தும்
இனவெறிப் பலிப் பீடத்தின் மீதமர்ந்து
வெள்ளந்தியாய் எதையோ
பார்த்துக்கொண்டிருந்தன
பாலச்சந்திரனின் கண்கள்..!

பயமறியாது நிலைகுத்தி நின்ற
அவனது கண்களில்
இனத்தின் பசியும்
நிலத்தின் வலியும்
நிரம்பி வழிந்தன.

அரை நூற்றாண்டுப் பெருந்தாகம்
நிலமெங்கும் புதைக்கப்பட்டது.

பசித்த கண்கள்
பலி தீர்க்காமலே மூடிக்கொண்டன.

உண்மையில் மீண்டும் மீண்டும் உறக்கத்தை தொலைக்கச் செய்யும் கவிதை.

ஈழ மண்ணைச் சேர்ந்த தோழமைக்கு தன் படைப்பை அனுப்புவதில் பெருமை கொள்வதாகவும் இப்புத்தகத்துடன் தன் ஆண்மாவைம் சேர்த்து அனுப்புவதாகவும் சொன்னார் நூலாசிரியர். அது எப்பேர்ப்பட்ட பேருண்மை என்பதை படிக்கும் போது உணர்ந்தேன்.

நூலாசிரியர் அரசறிவிலை நன்கறிந்துள்ளார். சமூக அரசியலை கவித்துவத்தில் மிக நேர்த்தியாக பிரதிபலிக்கச் செய்கின்றமை வன்முறைகளற்ற சொற்கலகத்திற்கு வித்திடுகின்றன.

கதிரவன் மீது காமங்கொண்ட நெருஞ்சியைப் போல் எம்மைத் தொடரும் கனவுகளுடன் ஒப்பிடுதல் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

கவிதை அறிந்து படித்தலும் எவ்வளவு அழகு என வாசகனை திருப்திக் கொள்ளச் செய்கின்ற படைப்பு நிலத்தில் முளைத்த சொற்கள்.

அன்று பிஜி தீவில் நம் தமிழ் பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்ட போது மகாகவி பாரதியார் கண்ணீர் வடித்தான். இன்று ஈழத்தமிழனுக்காய் தன் கவிதையால் கண்ணீர் வடிக்கின்றார் மகாராசன்.

இன்று முனைவருக்கு பிறந்த நாள். தோழமையே நீடூழி வாழ்க.



# பிணி போக்கிடுவோம்



உலகத்தில் வாழும் ஒவ்வொரு ஜீவனும் உணவு இல்லாமல் உயிர் வாழ முடியாது. நாம் எந்த வேலை செய்தாலும், பெரிய அந்தஸ்தில் இருந்தாலும் அத்தனையும் உணவுக்குள் அடங்கி விடுகிறது.

ஏழை, பணக்காரன் உண்ணும் விதம் வேறுபடலாம். ஆனால் உணவு எல்லோருக்கும் தேவை என்பது மட்டுமே உண்மை. பசி பொதுவான ஒன்று இயற்கையால் படைக்கப்பட்ட எல்லா உயிர்களுக்கும் உணவு அவசியம். உணவின் தேவை அதன் முக்கியத்துவம் ஆகியவற்றை உணர்த்தும்

உலக பட்டினி தினம், ஒவ்வோர் ஆண்டும் மே 28 அனுசரிக்கப்படுகிறது. உலகளவில் நீண்டகால பட்டினியால் வாடும் மக்கள் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த தினம் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.

ஒருவர் கூட பசி பட்டினியால் வாட கூடாது என்கிற கருத்தை வலியுறுத்தியும், ஒவ்வொரு ஆண்டும் மே 28ஆம் திகதி உலக பசி தினம் அல்லது உலக பட்டினி தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

“தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார்” பசி, உணவின் முக்கியத்தை உணர்த்தவே இத்தனை ஆவேசத்துடன் அன்றே மகாகவி பாரதியார் சொல்லியிருப்பார்.

பல்வேறு நாடுகளில், தற்போது வரை வறுமையால் பசியால் வாடும் பலர் இருந்து கொண்டு தான் உள்ளனர். ஒரு மனிதன் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதற்கு 2,100 கலோரி உணவு உட்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமான ஒன்று.

இதற்கு தீர்வு கொண்டு வர வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் இந்த பட்டினி தினம் கொண்டாடப்படுகிறது.

மேலும், ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையிலும், பசியால் இறப்பவர்கள் எண்ணிக்கை அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது உயிர்க்கொல்லி நோய்களால் ஆண்டுதோறும் இறப்போர் எண்ணிக்கையைக் காட்டிலும் பட்டினியால் ஏற்படும் மரணங்களே அதிகம் என ஐ.நா அறிக்கை வெளியிட்டுள்ளது.

பசி மற்றும் வறுமைக்கு நிலையான தீர்வுகளைக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் இத்தினத்தின் நோக்கம்.

2024 உலகளாவிய பசி குறியீட்டுப் பட்டியலின் பிரகாரம், இலங்கை 56ஆவது இடத்தில் உள்ளது 2024 உலகளாவிய பசி குறியீடு அறிக்கைக்காக, 136 நாடுகளுக்கான தரவு மதிப்பிடப்பட்டது. இவற்றில், 127 நாடுகளுக்கான 2024 உலகளாவிய பசி குறியீடு மதிப்பெண்களைக் கணக்கிட்டுத் தரவரிசைப்படுத்த போதுமான தரவு இருந்தது

உலகளாவிய பசி குறியீடு ஒவ்வொரு நாட்டிலும் இன்னும் கூட பசி எந்தளவு உள்ளது என்பதைக் கண்காணிக்கும் கருவியாகும். இது நான்கு முக்கிய காரணிகளைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

1.ஊட்டச்சத்துக் குறைபாடு
2.குழந்தை எடை வளர்ச்சி
3.குழந்தை வளர்ச்சி குறைவு
4.குழந்தை இறப்பு விகிதம்

ஆகியவற்றை வைத்துத் தான் இந்த உலகளாவிய பசி குறியீடு கணக்கிடப்படுகிறது.

ஒவ்வொரு நாட்டிற்கும் 100 புள்ளி என்ற அளவில் கணிக்கப்பட்டு உலகளாவிய பசி குறியீடு வழங்கப்படும். இதில் பூச்சியம் மதிப்பெண் இருந்தால் பசி இல்லா சிறந்த நாடாகக் கருதப்படும். அதேநேரம் 100 இருந்தால் அது மிக மோசமான நிலையில் இருக்கும் நாடாகக் கருதப்படும்.

இதில் 5க்கும் குறைவான மதிப்பெண்களைப் பெற்று, பெலாரஸ், போஸ்னியா & ஹெர்சகோவினா, சிலி, சீனா, கோஸ்டா ரிகா, குரோஷியா, எஸ்டோனியா, ஜார்ஜியா, ஹங்கேரி, குவைத், லாட்வியா, லிதுவேனியா, மாண்டினீக்ரோ, வடக்கு மாசிடோனியா, ருமேனியா,ரஷ்யா, செர்பியா, ஸ்லோவாக்கியா, துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், உருகுவே, உஸ்பெகிஸ்தான் ஆகிய 22 நாடுகளும் முதலிடத்தில் உள்ளன. 127ஆவது இடத்தில் சோமாலியா உள்ளது.

மக்கள் உணவின்றி தவிப்பதற்குப் போர், உள்நாட்டு நெருக்கடி, பருவநிலை மாற்றம், இயற்கை பேரிடர், பெருந்தொற்று, உணவு பங்கீட்டில் குறைபாடு, சுரண்டல் போன்றவை முக்கியமான காரணமாக இருக்கின்றன.

மக்கள் உணவின்றி தவிப்பதற்குப் போர், உள்நாட்டு நெருக்கடி, பருவநிலை மாற்றம், இயற்கை பேரிடர், பெருந்தொற்று, உணவு பங்கீட்டில் குறைபாடு, சுரண்டல் போன்றவை முக்கிய காரணமாக இருக்கின்றன. போரும், சுரண்டலும், உணவுப் பங்கீட்டில் குறைபாடும் மனிதர்களால் ஏற்படக்கூடியது. 1943 - 1944 ஆண்டுகளில் உலக மக்களின் கவனத்தைப் பெற்ற பெங்கால் வறட்சியில் (Bengal Famine) லட்சக்கணக்கான மக்கள் இறந்தனர். இதற்கு உணவுப் பற்றாக்குறையைக் காட்டிலும் முறையான உணவுப் பங்கீடு இல்லாததுதான் காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

உலக பட்டினி தினமான இன்றைய தினம் பசி எனும் பிணி போக்கிட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.



நைஜீரியா

## நைஜீரியாவில்
# 4,000 பெண்கள் வன்புணர்வு



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் பெண்கள், சிறுமிகள் உட்பட சுமார் 4 ஆயிரம் பேர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ஐ.நா. அமைப்பு சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், நைஜீரியாவில் கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை கட்டுப்படுத்த ஐ.நா. சார்பில் அமைதிப்படை வீரர்கள் களம் இறக்கப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவில் ஆளும் அரசாங்கத்தை எதிர்த்து பல்வேறு இனக் குழுக்கள், கிளர்ச்சியாளர்கள் போராடி வருகிறார்கள்.

அவர்கள் அவ்வப்போது அங்குள்ள கிராமங்களுக்குள் புகுந்து சூறையாடி கொள்ளை சம்பவத்தில் ஈடுபடுகிறார்கள். கடந்த சில நாள்களுக்கு முன்னர் அங்குள்ள கிராமத்திற்குள் புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர்.

கிளர்ச்சியாளர்கள் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஐ.நா. சார்பில் அமைதிப்படை வீரர்கள் களம் இறக்கப்பட்டு உள்நாட்டு இராணுவத்துடன் போராடி வருகிறார்கள். இந்த நிலையில் நைஜீரியாவில் கள நிலைவரம் குறித்து ஐ.நா. அமைப்பு சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 4 ஆண்டுகளில் நைஜீரியாவில் 700 பேர் உயிரிழந்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பெண்கள், சிறுமிகள் உட்பட சுமார் 4 ஆயிரம் பேர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

துருக்கி

## 3 வயது சிறுவனுக்காக
# ஊரே ஒன்று திரண்ட ஆச்சரியம்



துருக்கியின் இஸ்தான்புல் நகரில், இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த சிறுவன் குணமடைந்ததைக் கொண்டாடும் விதமாக, ஆயிரக்கணக்கானோர் சேர்ந்து வானில் வண்ண பலூன்களை பறக்கவிட்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.


இஸ்தான்புல்லை சேர்ந்த ஒருவர், தனது 3 வயது மகன் இரத்த புற்றுநோயிலிருந்து குணமடைந்ததை, வானில் வண்ண பலூன்களை பறக்கவிட்டுக் கொண்டாட இருப்பதாகவும், ஆனால் தங்களுக்கு யாரும் இல்லை என்றும், அதில் இணைய விரும்புபவர்கள் வரலாம் என்றும் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார்.

அவரது இந்த பதிவுகள் துருக்கி முழுவதும் வைரலான நிலையில், அந்த சிறுவனுக்காக இஸ்தான்புல்லில் ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு, அந்த நகரத்தையே ஸ்தம்பிக்க வைத்துள்ளனர்.

புற்றுநோய் பாதித்து குணமடைந்த சிறுவனின் தந்தையின் வார்த்தைக்காக பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு வந்து வானில் வண்ண பலூன்களை பறக்கவிட்ட நிகழ்வு அனைவரையும் நெகிழ்ச்சி அடைய செய்துள்ளது. இந்நிகழ்வில் புற்றுநோய் பாதித்த பலரும் பங்கேற்றனர்.

பாகிஸ்தான்

# "இந்தியாவுடன் பேசத் தயார்"



இந்தியாவுடனான இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு தயார் என பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை என இந்தியா உடனான அனைத்து பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க நாங்கள் விரும்புகிறோம். மேலும், வர்த்தகம் மற்றும் பயங்கரவாத ஒழிப்பு குறித்து எங்கள் அண்டை நாடுகளுடன் பேசவும் தயாராக இருக்கிறோம்" என்றும் பிரதமர் ஷெபாஸ் அவர் கூறியுள்ளார்.

பஹல்காம் தாக்குதலுக்கு கடந்த 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இந்தியா, பாகிஸ்தான் இடையே அதிதீவிர போர் நடைபெற்றது.

ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்தியாவின் முப்படைகளும் தாக்குதல் நடத்தின. இந்திய இராணுவத்தின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் சர்வதேச நாடுகளின் உதவியை பாகிஸ்தான் நாடியது.

இறுதியில் பாகிஸ்தான் மூத்த தளபதி நேரடியாக இந்திய ராணுவ மூத்த தளபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பாகிஸ்தானின் வேண்டுகோளை ஏற்று கடந்த 10ஆம் திகதி இரு நாடுகளிடையே போர் நிறுத்தம் அதுலுக்கு வந்தது.

இந்நிலையில், இந்தியாவுடனான இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு தயார் என பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.

# ஜோதிக்கு துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு




பாகிஸ்தானுக்காக உளவுபார்த்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஹரியானாவைச் சேர்ந்த யூடியூபர் ஜோதி மல்ஹோத்ராவுக்கு பாகிஸ்தானில் ஆறு பேர் ஏகே-47 துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு வழங்கியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிர்ச்சி தகவலை ஸ்காட்லாந்து யூடியூபர் வெளியிட்டுள்ளார்.

யூடியூபர் ஜோதி மல்ஹோத்ரா பாகிஸ்தானுக்கு சென்றிருந்த போது லாகூரில் உள்ள அனார்கலி பஜாருக்கு சென்று சுற்றிப்பார்த்துள்ளார். அப்போது அவருக்கு ஏகே-47 துப்பாக்கி ஏந்திய ஆறு பேர் சுற்றிநின்று பாதுகாப்பு வழங்கியுள்ளனர். இதனை தான் நேரில் பார்த்ததாக ஸ்காட்லாந்து யூடியூபர் கல்லம் மில் கூறியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

"கல்லம் அப்ராடு" என்ற யூடியூப் சேனலை நடத்தி வரும் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கல்லம் மில் கடந்த மார்ச் மாதம் பாகிஸ்தான் சென்றிருந்தார். லாகூரின் அனார்கலி பஜாரில் அவர் எடுத்த வீடியோவில் " நோ பியர்" என எழுதப்பட்ட ஜாக்கெட் அணிந்தவர்கள் துப்பாக்கியுடன் நின்றிருக்கின்றனர். அவர்களுக்கு மத்தியில் ஜோதி மல்ஹோத்ரா காணப்படுகிறார்.

இதனிடையே, உளவாளி யூடியூபர் ஜோதி மல்ஹோத்ரா ஹரியானாவின் ஹிசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

# சீனாவில் 30 இலட்சம் இளைஞர்களுக்கு மணப்பெண் தட்டுப்பாடு

சீனாவில் சுமார் 30 இலட்சம் இளைஞர்களுக்கு மணப்பெண் தட்டுப்பாடு என்ற சூழல் நிலவி வரும் நிலையில், பங்களாதேஷில் இருந்து மணப்பெண்களைக் கடத்தி சட்டவிரோதமாக திருமணம் செய்ய சீன மணமகன்கள் முன்வருகின்றனர்.

தரகர்கள், ஒன்லைன் விளம்பரங்கள் மூலம் இதுபோன்ற திருமணங்கள் நடைபெறுவதாக கூறப்படுகின்றது.

இதனால் பங்களாதேஷில் உள்ள சீன இளைஞர்கள் யாரும் வெளிநாட்டுப் பெண்களை மணக்க வேண்டாம் என அந்நாட்டுத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.



## ஐ.பி.எல்: முதலாவது தகுதிகாண் போட்டியில்
# பஞ்சாப் தகுதி

இந்தியன் பிரீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) முதலாவது தகுதிகாண் போட்டிக்கு பஞ்சாப் கிங்ஸ் தகுதி பெற்றுள்ளது.

ஜெய்ப்பூரில் திங்கட்கிழமை(26) அன்று நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 19 புள்ளிகளைப் பெற்று புள்ளிகள் பட்டியலில் முதல் இரண்டு இடங்களுக்குள் வருவதை உறுதிப்படுத்தி முதலாவது தகுதிகாண் போட்டிக்கு பஞ்சாப் தகுதி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பஞ்சாப்

மும்பை: 184/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் 57 (39), றயான் றிக்கெல்டன் 27 (20), ஹர்திக் பாண்டியா 26 (15), றோஹித் ஷர்மா 24 (21), நாமன் திர் 20 (12), வில் ஜக்ஸ் 17 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: அர்ஷ்டீப் சிங் 2/28 [4], மார்கோ ஜன்சன் 2/34 [4])

பஞ்சாப்: 187/3 (18.3 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜொஷ் இங்லிஸ் 73 (42), பிரியன்ஷ் ஆர்யா 62 (35), ஷ்ரேயாஸ் ஐயர் ஆ.இ 26 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 1/23 [4])

போட்டியின் நாயகன்: ஜொஷ் இங்லிஸ்.



## பங்களாதேஷுக்காக விளையாட
# ஷகிப்புக்கு கதவு திறந்துள்ளது

பங்களாதேஷ் அணிக்கு ஷகிப் அல் ஹஸன் திரும்புவதற்கான கதவை அந்நாட்டு கிரிக்கெட் சபை திறந்து வைத்துள்ளதாக கிரிக்கெட் சபையின் பணிப்பாளர் இஃப்திஹார் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்களுக்குப் பின்னர் கடந்த வாரமே விளையாடுவதற்கு ஷகிப் திரும்பியிருந்தார்.

## இன்று ஆரம்பமாகும் தொடர்:
# பாகிஸ்தானை வெல்லுமா பங்களாதேஷ்?




பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரானது லாகூரில் இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

ஐக்கிய அரபு அமீரகத்துடனான தொடரில் தோல்வியடைந்துள்ள நிலையில் பாகிஸ்தானை வெல்ல வேண்டுமானால் அணித்தலைவர் லிட்டன் தாஸ், தௌஹிட் ஹிரிடோய், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ உள்ளிட்டோரிடமிருந்து தொடர்ச்சியான பெரிய இனிங்ஸ்கள் அவசியமாகின்றன.

காயம் காரணமாக முஸ்தபிசூர் ரஹ்மானும் இல்லாத நிலையில், பனியின்போது ஹஸன் மஹ்மூட், தன்ஸிம் ஹஸன் சகிப் ஆகியோர் பந்துவீசுவதற்கு உடனடியாக கற்றுக் கொள்ள வேண்டியதாகவிருக்கிறது.

மறுபக்கமாக பக்கர் ஸமன், சைம் அயூப் ஆகியோர் காயத்திலிருந்து குணமடைந்து அணிக்கு வருகின்றமை பாகிஸ்தானுக்கு பலத்தை வழங்குவதுடன், நசீம் ஷா, ஹஸன் அலி, மொஹமட் வஸிமின் மீள்வருகையும் அவ்வணிக்கு பலத்தை வழங்கும்.

# டென் ஹக் முகாமையாளர்



ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயெர் லெவர்குசனின் முகாமையாளராக இரண்டாண்டு ஒப்பந்தமொன்றில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் முகாமையாளர் எரிக் டென் ஹக் நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கழகம் திங்கட்கிழமை (26) தெரிவித்துள்ளது.

முன்னதாக தனது இன்னொரு முன்னாள் கழகமான நெதர்லாந்தின் அஜக்ஸுக்கு டென் ஹக் திரும்புவாரெனக் கூறப்பட்டிருந்தது.

# பிரேஸில் குழாமில் நெய்மர் இல்லை



பிரேஸிலின் புதிய பயிற்சியாளர் கார்லோ அன்சிலோட்டியின் முதலாவது குழாமில் நெய்மர் இடம்பெறவில்லை.

இந்நிலையில் கஸேமீரோ, றிஷலிஷன், அந்தனி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இரண்டு ஆண்டுகளாக றிஷலிஷனும், கஸேமீரோவும் பிரேஸிலுக்காக விளையாடியிருக்கவில்லை.

இது தவிர றொட்றிகோ, என்ட்றிக் ஆகியோரும் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்:

கோல் காப்பாளர்கள்: அலிஸன், பென்டோ, ஹுயூ ஸூஸா

பின்களவீரர்கள்: அலெக்ஸான்ட்ரோ, அலெக்ஸான்ட்ரோ றிபெரியோ, பெரால்டோ, கார்லோஸ் அகஸ்டோ, டனிலோ, லியோ ஒர்டிஸ், மார்க்குய்ன்ஹொஸ், வன்டர்சன், வெஸ்லே

மத்தியகளவீரர்கள்: அன்ரயாஸ் பெரைரா, அன்ட்ரேசன்டோஸ், புரூனோ குய்மரஸ், கஸேமீரோ, எடெர்சன், ஜெர்சன்

முன்களவீரர்கள்: அந்தனி, எஸ்டியாவோ, கப்ரியல் மார்டினெல்லி, மதெயுஸ் குன்ஹா, றபீனியா, றிஷலிஷன், வினிஷியஸ் ஜூனியர்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 28, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.